தலைமைச் செயலகம்
சென்னை - 9

<u>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை</u>

<u>அரசு கடித (நிலை) எண்.86/க்யூ.1/2010 நாள்.4.5.2010</u>

விடுநர்,
டாக்டர். த. பிரபாகர ராவ், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்,
முதன்மைச் செயலாளர்/செயலாளர்,
தலைமைச் செயலக அனைத்துத் துறைகள்,
அனைத்துத் துறைத் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
ஆணையர், நில நிர்வாகத்துறை, சென்னை-5.
ஆணையர், நிர்வாக வருவாய்த்துறை, சென்னை-5.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-104/ மதுரை.
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-32
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
மாநிலக் கணக்காயர், சென்னை-18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை-35.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்/ அனைத்து கருவூல அலுவலர்கள்.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-9
முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9
அமைச்சர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்கள், சென்னை-9

ஐயா/அம்மையீர்,

பொருள்: கருணை அடிப்படைப் பணிநியமனங்கள் – விண்ணப்பங்கள் பெறுவது மற்றும் குறுமவயது நிர்ணயித்தல் – தெளிவுரைகள் – வழங்கப்படுகின்றன.

பார்வை:
1. அரசு கடித எண்.66813/க்யூ1/91–3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 22.11.1991.
2. அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.06.1995.
3. அரசாணை (நிலை) எண்.112, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 23.08.2005.
4. அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12.03.2007.

– – – – –

கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் தொடர்பான இதர விதிமுறைகளுக்கிடையே, பார்வை ஒன்றில் காணும் அரசு கடிதத்தில் பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் 18 வயதிற்குட்பட்ட வாரிசுதாரருக்கும் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கலாம் என தெளிவுரை வழங்கப்பட்டது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், கருணை அடிப்படையில் பணிவேண்டி விண்ணப்பிக்க அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து 3 ஆண்டுகள் என கால அளவு நிர்ணயித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

**3.** பார்வை மூன்றில் காணும் அரசாணையில், அரசுப்பணிக்கான குறும வயது 18 எனவும், காலிப்பணியிட அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டின் ஜூலைத் திங்கள் முதல் நாளில் 18 வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும் எனவும், இந்த ஆணை 23.08.2005 முதல் நடைமுறைக்கு வருவதாகவும், இவ்வாணை, கருணை அடிப்படையிலான பணிநியமனங்களுக்கும் பொருந்தும் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. பார்வை நான்கில் காணும் அரசாணையில், இதர வழிகாட்டுதல்களுடன் கருணை அடிப்படையிலான பணி நியமனம் தொடர்பாக, உச்சநீதிமன்றத்தால் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

5. இந்நிலையில், பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட குறுமவயது நிர்ணயிப்பது தொடர்பாக கீழ்க்காணும் தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன:-

(i) 23.08.2005–க்கு முன்னர், கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 3 ஆண்டு காலக்கெடுவுக்குள் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 18 வயதினை நிறைவு பெறாமல் இருந்தாலும், கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான ஏனைய பிற தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில் தகுதியானதாகக் கருதப்பட வேண்டும்;

(ii) 23.08.2005 முதல் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்கான குறும வயது 18 என நிர்ணயிக்கப்பட்டதால், அரசு கடித எண்.66813/க்யூ.1/91-3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.22.11.1991-இல் வெளியிடப்பட்ட தெளிவுரைகள் நீக்கப்பட்டவையாகக் கருதப்பட்டு, 23.08.2005–க்கு பின்னர் 18 வயது நிரம்பிய வாரிசுதாரர் மட்டுமே கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறத்தகுதியானவர் எனக் கருதப்பட வேண்டும்;

(iii) கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு அரசு ஊழியர் இறந்து மூன்றாண்டிற்குள், விண்ணப்பதாரர் விண்ணப்பம் அளிக்கும் நாளினையே கணக்கில் கொண்டு, வயது மற்றும் கல்வித் தகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்;

(iv) மேலே பத்தி 5 (iii)-ல் உள்ள தெளிவுரை இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

6. மேற்காணும் தெளிவுரையின்படி, அனைத்து பணி நியமனங்களையும், ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து பணி நியமன அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

<u>நகல்</u>

முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை- 9
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அனைத்து பிரிவுகள்.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை/ சட்டத்துறை, சென்னை-9
இருப்பு கோப்பு/உதிரி நகல்.